# மாணவர் கட்டுரைகள்

வெளியீடு: 1 | கார்த்திகை மாதம் | 1994

## பொருளடக்கம்

எமது தாயகம்

உண்மை

சிறுதுரும்பும் பல் துலக்க உதவும்

ஏழை கண்ட கனவு

உடற்பயிற்சியின் அவசியம்

வானொலி மூலம் நாடகக்கலையும் இசைக்கலையும் பெற்ற நன்மைகள்

மகாவலி கங்கையின் சுயசரிதை

சோமசுந்தரப் புலவர்

தேர்த் திருவிழா

கலாஜோதி ஆனந்தக் குமாரசுவாமி

யாழ் நூலகத்தின் சுயசரிதை

கட்டுரைப் போட்டி நடாத்துனர்:- திரு மகேந்திரராசா

விலை:-

# வாழிய வாழியவே!

வரவேண்டும் மலரவேண்டும்
புதிய தமிழ் கட்டுரைகள்
வளரவேண்டும் உயரவேண்டும் - அவை
பொங்கு மெழில் ஈழத்திலே!
பல்சுவைக் கட்டுரைகள்
பாரினிலே உலாவிவர
பள்ளி மாணவர்கள் - பரீட்சையிலே
பல தடை(கள்) தாண்டி சித்திபெற
சிந்தைமிகு கட்டுரைகள்
தெவிட்டாத தேன் துளிகள்!
அந்தமில் அறிவோ டாற்றல்
ஆசையாய் கற்றே வாழி!
நதியின் அருள் நீர் நல்லபிஷேகம்
சொரிந்தே வாழ்த்தி துதித்தாற்றிடுவோம்
கலைமகள் கூடியிங்கோரிடம்
சேர்ந்தனமதல்
அருமை இனிமை யென்றே யுல
கட்டுரை ஆன்ற மொழி
பெருமையில் எம் மாணவ மணிகள்
பாட்டைப் பேசிடவே!
வருமொரு செல்வ நின்
''கலைச் செல்வியோ டூழி வாழியவே''

1994, நவம்பர்

சி. ஷோனா
மொ. வி. பி.,
வர்த்தகத் திணைக்களம் (வ. பி.)

**திரு. செல்லையா பத்மநாதன் B. A. (Economics) Hons.**
**S. L. A S. - Grade -1**

திட்டப்பணிப்பாளர் - கச்சேரி - யாழ்ப்பாணம்.

இளம் மாணவ சந்ததியிடையே எழுத்தாளர்களை யும் கருத்து வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் நோக்கத் துடன், இலைமறைகாயாக இருந்து சிறு சிறு போட்டி களை நடாத்தி அதில் சிறந்த கட்டுரைகளை மற்றைய மாணவர்களுக்கு வாசித்து பயன் பெறுவதாக செய்த அமைப்பாளர்கள் சிறந்த கட்டுரைத் தொகுப்பொன்றை வெளியிடுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

இத் தொகுப்பில் உள்ள கட்டுரைகள் சிறந்தவைக ளாகவும்கருத்தாளம் மிக்கவையாயும் மற்றைய மாணவர் களுக்கு பயன்படக் கூடியவையாகவும் உள்ளன.

மாணவர்களது முயற்சியும், வெளியீட்டாளர்களின் அயராத முயற்சியும். சேவையும் இன்னும் இப்படியான அரிய கருவூலங்களை இளையதலைமுறையினருக்கு அளிக்க வேண்டு மென்று எனது ஆசையைத் தெரிவிக்கின்றேன்.

பிஞ்சு உள்ளங்கள் கொண்ட எழுத்தாளர்கள்
நெஞ்சம் மகிழ்விக்க வந்திருக்கின்றார்கள் — அவர்களை
கொஞ்சுதமிழால் வாழ்த்துகின்றேன்.

வணக்கம்

அன்புள்ள
செ. பத்மநாதன்

# முகவுரை

வளர்ந்து வரும் இளம் சமுதாயத்திற்கு போசாக்குள்ள உணவு எவ்வளவு அத்தியாவசியமோ அதேமுறையில் கல்வி பயிலும் இளம் மாணவ மாணவிகளுக்கு சிறந்த பயனுள்ள கல்வி ஊட்டப்பெற வேண்டுமென்பதை சீரான சிந்தனையாளர்கள், விசேடமாக ஆசிரியர்கள் பூரணமாக முனைந்து ஏற்றுக்கொள்வார்கள் என்பது எனது திண்ணமான எண்ணமாகும்.

மாணவ, மாணவிகள் குறிப்பாக எமது தேனினுமினிய தமிழ் மொழி மூலம் கல்வி பயிலும் சிறார்கள், இளமையிலேயே சிறப்பாக எழுத, வாசிக்க, சம்பாஷிக்க முயலும் அதேவேளையில், சிறந்த சிறிய கதைகள், கட்டுரைகளை எழுதவும்பயிலவேண்டும். "தொட்டிலில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்னும் முதுமொழிக் கிணங்க இளமையிலேயே மாணவ, மாணவிகள் இப் பழக்கத்தை கைக்கொண்டு ஒழுகுவார்களேயானால் எதிர்காலத்தில் அவர்கள் புகழ்பூக்கும் எழுத்தாளர்களாகத் திகழமுடியும் என்பதில் ஆசங்கை கிடையாது.

"தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி,
தன் மெய்வருத்தக் கூலி தரும்" என்னும்

பொதுமறைக் கூற்றிற்கு இணங்க, முயன்றால் ஆகாதது ஒன்றுமில. "முயற்சி திருவினையாக்கும்" உலகப்பிரசித்தி பெற்ற போர் வீரனான நெற்போலியன் "முடியாதது" என்னும் பதத்தை அகராதியிலிருந்து நீக்கவேண்டுமென்று கூறினானென செந்தமிழ் நூல்கள் இதிகாசவாயிலாகச் சிறப்பித்துக் கூறுகின்றன.

அந்தவகையில், ஆண்டு (8) எட்டில் பயிலும் மாணவியினாலும், ஆண்டு (4) நான்கில் படிக்கும் மாணவியினாலும் வரையப்பெற்ற 16 கட்டுரைகளை இளம் மாணவ.

மாணவிகள் வாசித்துப் பயனடையும் பொருட்டு இதனை கத்தே பிரசுரம் செய்து அளிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

'வாழ்க தமிழ்மொழி' வளர்க தமிழ் மாணவ மணிகள்.

தம்பு இராமலிங்கம்
இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபரும்
விசேட ஆணையாளரும்

★


உங்களின்

1 பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள்,
2 விவாகப் பதிவு ஆவணங்கள்,
3 இறப்புச் சாட்சிப் பத்திரங்கள்,
4 சத்திய ஓலைகள்,
5 காவற்துறை அறிக்கைகள்

ஆகிய

இன்னோரன்ன பத்திரங்களை, தமிழ், சிங்கள, ஆங்கில, மொழிகளில் சீராக, துரிதமாகப் பெற விரும்புகிறீர்களா?

அப்படியானால்

நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்:-

தம்பு-இராமலிங்கம்

இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபரும்
விசேட ஆணையாளரும்,
சத்திய எழுத்து மொழி பெயர்ப்பாளரும்,
அகில இலங்கை மும்மொழி உரைமொழிப்பாளரும்,

முகவரி:-

"அயோத்தியா"
இல;- 55 நொத்தாரிஸ் வீதி,
அரியாலை. யாழ்ப்பாணம்

# ஆசிரியர் உரை

இக் கட்டுரைகளை மிகவும் திறம்பட எழுதிய சகல மாணவ மாணவிகளிற்கும் மற்றும் ஆசியுரை வழங்கியவர்களிற்கும் இப் புத்தக வெளியீட்டிற்கு சகல உதவிகளையும் ஒத்தாசையும் கொடுத்து ஆக்கமும் ஊக்கமும் வழங்கியவர்களிற்கும் மனப்பூர்வமான ஆசியுரை ஒன்றினை வழங்கிய திருவாளர். செ. பத்மநாதன் - யாழ்வர்த்தக திணைக்களம் ஆணையாளர் அவர்கட்கும் எனது இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக்கொள்வதோடு

திரு. தம்பு இராமலிங்கம் - யாழ் வர்த்தக திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் அவர்கள் எனக்கு சகல வழிகளிலும் இப்புத்தக வெளியீட்டிற்கு ஆக்கபூர்வமான உதவிகளையும் ஒத்தாசைகளையும் நல்கியதுடன் இக்கட்டுரைகளை புத்தக ரூபமாக வெளியிடுவதற்கு முகவுரையையும் வழங்கியதற்கு எனது உளம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதில் மிகவும் பூரிப்படைகின்றேன்.

இப் புத்தக வெளியீட்டிற்கு சகல ஒத்தாசைகளை நல்கியவர்களின் விபரப்பட்டியல் பின்வருமாறு

1. திரு சு. அருள்லிங்கம் - வர்த்தகத்திணைக்களம் கிளிநொச்சி
2. திரு. சிறீதரன் - சைனீஸ் ஹோட்டல், யாழ்ப்பாணம்
3. திரு. பிரபாகரன் - நச்சுத்தொழிற்சாலை அரியாலை
4. திரு. சோ. சோமலிங்கம் - பொதுமுகாமையாளர் யாழ் வர்த்தகத்திணைக்களம்
5. திரு. சி. மகேந்திரராசா - பொதுமுகாமையாளர் யாழ் வர்த்தகத் திணைக்களம்
6. திரு. க. பிரபாகரன் - வர்த்தகத்திணைக்களம் நல்லூர்
7. திரு. சி. பூதத்தம்பி - வர்த்தகத்திணைக்களம் அரியாலை
8. திரு. ந. சற்குணம் - வர்த்தகத்திணைக்களம் யாழ்ப்பாணம்
9. திரு. சி. பூபாலசிங்கம் - வர்த்தகத்திணைக்களம் கோப்பாய்

10. திரு. தி. யோகேந்திரராசா – வர்த்தகத்திணைக்களம் யாழ்ப்பாணம்

11. திரு, ஈஸ்வரநாதன் – முகாமையாளர் மானிப்பாய்

12. திரு அருணகிரிநாதன் – முகாமையாளர்சுன்னாகம்

13. திரு .சி. கணேஸ்வரன் – முகாமையாளர் சுண்டிக்குளி

14. அருள்மதி – போக்குவரத்துச்சேவை யாழ்ப்பாணம்

இக் கட்டுரைகளை ஊக்கமெடுத்து பரிசீலனை செய்து தகுந்த முறையில் அவைகளை ஆக்கியதற்காக திரு. க. தவபநசன் அவர்கட்கும் எனது மனப்பூர்வமான நன்றியினை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கவிஞர். திரு. G. G தேவதாசன் அவர்கள் எமது கட்டுரைகளை மிகவும் சிரமங்களிற்கு மத்தியில் மிகவும்சீரிய முறையில் பிளைகளை திருத்தியும் சரிபார்த்தும் ஒழுங்காகவும் மிகவும் அழகாகவும் தட்டச்சு செய்து தந்ததிற்கு எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்கின்றேன்.

கட்டுரைகள் வரைந்த மாணவ மாணவிகளின் விபரம்

1 பரமானந்தம் துளசியா – கல்வியங்காடு
2 M, கிருஷ்சாந்தினி – கச்சேரி ஒழுங்கை
3 ப. தாசிகா – கல்வியங்காடு
4 M. மதுசாந்தினி – கச்சேரி ஒழுங்கை

8-ம் ஆண்டிற்கு கீழ் கல்வி கற்கும் மாணவர்கட்கு ஓர் வேண்டுகோள்

நல்ல தலைப்புக்களை கொண்ட கட்டுரைகளை எழுதி கீழ் கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும் நாம் அவற்றை பரிசிலனை செய்து முறையே சிறந்த கட்டுரைகளிற்கு 1-ம் 2-ம் 3-ம் பரிசில்களை வழங்குவோம்.

பரிசுத்தொகை:- 1-ம் பரிசு — ரூ 200/-
2-ம் பரிசு — ரூ 150/- 3-ம் பரிசு — ரூ 100/-

பரிசில்கள் வழங்குபவர்

திரு.சோ. சோமலிங்கம்-வர்த்தகத்திணைக் களம்யாழ்ப்பாணம்

மறுமுறை பிரசுரம் செய்யப்படும் புத்தகவெளியீட்டில்பரிசு பெற்றவர்களின் விபரங்களும் கட்டுரைகளும் வெளிவரும்.

இங்ஙனம்
கட்டுரைப் புத்தக வெளியீட்டாளர்:-
திருவாளர்:- வேலுப்பிள்ளை மகேஸ்வரன்

# எமது தாயகம்

எமது தாயகம் ஈழத்திருநாடு. இது நீர்வளம், நிலவளம், கடல்வளம் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற எழில்மிகு நாடாகும். இதனால் இதன் புகழ் பாரெல்லாம் பரவிக் கிடக்கிறது. இங்கு தமிழர் என்ற இனத்தவர் அதாவது எம்மினத்தவரே வாழ்கின்றனர். இங்கு இந்து மதத்தவரும், கிறீஸ்தவ மதத்தவரும் வாழ்கின்றனர். எமது தலைவர் வேலுப்பிள்ளை - பிரபாகரன் அவர்களேயாகும்.

தாய் பெண்தான். பெண்மனம் நோய்யாததுதான். ஆனால் எங்கள் தாய் உரமும் வரமும் பெற்றவள். அப்படியே தன் நாட்டுச் செல்வங்களை எல்லாம் அதாவது தன்மக்களை எல்லாம் தன் மக்களைப்போன்று உரமும், வரமும் பெற்றவையாகப் படைத்து விட்டாள். இந்த தாயகத்தின் தாய், ஆம் எங்கள் தாய் எவ்வளவு ஆயிரம் மக்களை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றாள் தெரியுமா?

ஆம் இவளின் சிறப்புகள் பல. தைபர் நதியைக் கடந்து இத்தாயகத்துக்குள் நுழைய மூற்பட்ட பகைவனை, தன் நண்பர் சிலரின் உதவியுடன் எதிர்த்து நின்று பாலத்தை உடைத்து தன் தாயகத்தைக் காத்தான் "கோரேசியஸ்" என்ற தேசபக்தன். இப்படியான தியாகிகளின் வழிகளை பின்பற்றி நாமும் எம் தாயகத்தைக் காப்போமாக.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் தனி சிறந்தனவே.

# உண்மை

அந்தக் கிராமத்தின் மையப் பகுதியில் சாப்பாட்டுக் கடை வைத்திருப்பவள் ராசிக்கிழவி. அவள் அந்தக் கிராமத்தில் ரொம்ப நல்லவள். உண்மையானவள். கலப் படம் செய்யாதவள். நேர்மையானவள். பிறர் பொருள் மீது ஆசை வைக்காதவள். தூய்மையானவள் என்றெல் லாம் அவளுக்கு நல்ல பெயர் இருந்தது. அத்துடன் அவள் பரிமாறும் சோறின் ருசிக்காக அவளின் வீட்டுக்கு தின மும் வாடிக்கையாளர்கள் மூன்று வேளையும் வந்து போன வண்ணம் இருப்பார்கள். ராசிக்கிழவிக்கும் நல்ல வருவாய் வந்துகொண்டிருக்கும். இவள் தனது வீட்டை விஸ்தீரணம் செய்து, அழகு தூய்மையாக வைத்திருப்பாள். ஒரு சமயம் ''மாணிக்கம்'' என்னும் வைர வியாபாரி அந்தக் கிரா மத்துக்கு வியாபார வேலையாக வந்து சில நாட்கள் கிழவியின் விடுதி வீட்டிலேயே தங்கிச் சாப்பிட்டான். ஊரார் கிழவியை ''ஆகா ஓகோ'' எனப் புகழ்வது கண்டு அவளைச் சோதிக்க எண்ணி தான் புறப்படும்போது ஒரு வைர மூடிப்பை விட்டுச் சென்றான். அதைக் கிழவி கண்டெடுத்து அவள் உண்மையானவளென்றால் பஞ்சா யத்தில் ஒப்படைப்பாள் அது நமக்கும் செய்தி வருமென்று காத்திருந்தான். நாட்கள் ஒரு மாதமாகியதே தவிர செய்தி வரவில்லை. இதற்கு மேலும் விட்டு வைக்கக்கூடாது என்று மாணிக்கம் நேரே பஞ்சாயத்துக்கு முறை யிட்டான்.

பஞ்சாயத்தார் கிழவியையும் அங்கு அழைத்தனர். கிராமமே திரண்டது. பஞ்சாயத்தார் கேட்ட கேள்விக்கு கிழவி பின்வருமாறு விடையளித்தாள். ''இது பிறருடைய

தென்று எனக்குத் தெரியும். ஆனால் யாருடையதென்று எனக்குத் தெரியாது. அந்த வைர முடிச்சை உரியவரிடம் ஒப்படைக்காதது எனது தவறுதான். அதுவும் தெரியும். ஆனால் நான் அந்த வைர முடிச்சை உங்களிடம் தந் தால் வேறு எவராவது வந்து உரிமை கொண்டாடி வாங்கிப்போய்விட்டால் என்ன செய்வது. அதற்காகத் தான் உரியவர் வந்து கேட்கும்வரை காத்திருந்தேன் என்று சொன்னாள்.

இந்தப் பதிலைக் கேட்டவுடன் "மாணிக்கம்" "நான் உங்களைச் சோதிக்கத்தான் இப்படிச் செய்தேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறியது மட்டுமல்லாமல் இராசிக்கிழவியின் கையில் அந்த வைர முடிப்பை வைத்து இதைப் பணமாக்கி ஊனமூற்றோருக்கும், ஏழை எழியவர் களுக்கும், அனாதைகளுக்கும், நோயாளிகளுக்கும் உதவி செய்யும்படி கிழவிக்குக் கூறியதோடு, அவளின் உண் மையைப் போல் உலகத்தில் எல்லோரும் நடந்தால், நாட்டில், கொலை, களவு ஏற்படாதெனக் கூறி அவளை வாழ்த்திச் சென்றான்.

# சிறுதுரும்பும் பல் துலக்க உதவும்

"சிறு துரும்பும் பல் துலக்க உதவும்" என்பது முதுமொழி. இதனுடைய பொருள் என்னவென்றால் எந்தப் பொருளும் பயன்படும். ஆகையால் எதையும் பேணிப்பாதுகாக்கவேண்டுமென்பதே. உயிருள்ள பிராணிகளும்தான் உதவாக்கரையென்று ஒதுக்கப்படும் மனிதர்களும்தான் என்றே பயன் உண்டு என்று நம்பி மதிப்பது புத்தசாலித்தனமான மடமைப்பண்பாகும் இவ் உண்மைக்கு எடுத்துக்காட்டாக ஒரு சிறுகதையை நோக்குவோம்.

ஒருநாள் மர நிழலில் சிங்கம் ஒன்று உறங்கிக்கொண்டிருந்தது. அப்பொழுது மரத்திலிருந்து எலி ஒன்று கால் தவறி அதன் மீது வழுந்துவிட்டது. சிங்கம் நித்திரை கலைந்து கோபத்துடன் பார்த்த பொழுது அதன் முன் எலி ஒதுங்கியபடி நின்றது. "ஐயா மன்னித்துக்கொள்ளுங்கள் என்னை" என்னை உயிருடன் விட்டு விட்டால் உங்களுக்கு நான் என்றோ ஒருநாள் என்னாலான உதவியைச் செய்வேனென்று அது கூறியது." சிங்கம் எலியைப்பார்த்து ஏளனமாய்ச் சிரித்தபடி நீ அன்பான சிறு பிராணி எனக்கு உதவுவதா? உன்னைக்கொல்வது என் விரதத்துக்கு அழகன்று. பிழைத்துப்போ" என்று அதனைத் தப்பிச் செல்ல விட்டது.

பின்பு ஒருநாள் வேடர் வைத்த கண்ணியில் அகப்பட்ட சிங்கம் தப்பமுடியாது தவித்தது. அவ்வேளையில் எங்கிருந்தோ இருந்த எலி தன் கூரிய பற்களால் கண்ணி வலையை அறுத்து சிங்கத்தை விடுவித்தது அப்போதுதான் சிங்கத்துக்கு அற்ப பிராணியும் சமயத்தில் உதவும் என்ற உண்மை புலனாயிற்று.

இந்த உண்மை நாம் கழிவுப்பொருட்கள் என்று தள்ளிவிடும் கடதாசித்துண்டுக்கள், தகரங்கள், கடதாசியான பொருட்கள் முதலியனவற்றிக்கும் பொருந்தும். பாலர் வகுப்புக்களில் செயல் மூலம் உணர்தல் என்ற பாடத்தில் பிள்ளைகள் தமது கற்பனையை ஒட்டி பொருட்கள் செய்ய இவை உதவுகின்றன, எனவே மேலே குறித்த பழமொழியை விழங்கிக்கொண்டு எந்தப் பொருளையும் வீணாக்காமல் பயன்படுத்துவோமாக.

# ஏழை கண்ட கனவு

சோமன் ஒரு ஏழை. அயலில் இருந்த கடைகளில் பிச்சை வாங்கி வாங்கித் தன் வாழ்க்கையை நடாத்தி வந்தான். இரவில் தன் நகரில் உள்ள சிவன் கோவில் முன்னே உள்ள மடமொன்றில் படுத்து உறங்குவான்.

அன்று வெள்ளிக்கிழமை மடத்தின் அருகில் உள்ள சாப்பாட்டுக்கடை முதலாளி அவனுக்கு நிறைய உணவு கொடுத்தார். அவன் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு மடத்துக்குச் சென்றான். அங்கே தன் லொத்தர் சீட்டு இலக்கத்தைத் தன் வேட்டித் தலைப்பில் வைத்து பத்திரமாக முடித்தான். அதன் இலக்கத்தை பலமுறை மனப்பாடம் செய்தான். அவனுக்கு தூக்கம் வந்தது. மடத்தின் ஒரு மூலையில் படுத்தான். சிறிது நேரத்தில் அவன் கண்ணயர்ந்து விட்டான்.

அது அவன் பக்கத்தில் ஒருவர் பத்திரிகையும் கையுமாக நிற்பது தெரிந்தது, அன்றைய வீரகேசரிப் பத்திரிகை. அதில் முதற் பக்கத்தில் அன்றைய லொத்தர் சீட்டு முடிவுகள் பிரசுரமாகி இருந்தன. அவன் அதை எட்டிப் பார்த்தான். பத்திரிகை வைத்திருப்பவர் இதனைப் பார்த்தார். அவர் அவன்மீது இரங்கி என்ன பார்க்கப் போகின்றீர் என்று கேட்டார். அவர் கேட்டது சோமுவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவன் லொத்தர் சீட்டு முடிவைத்தான் பார்க்கப்போகின்றேன் என்று கூறினான்.

பெரியவர் அந்த வீரகேசரியை அவனிடம் கொடுத்தார். ஒவ்வொரு இலக்கத்தையும் சோமன் உன்னிப்பாகப் பார்த்தான். திரும்பத் திரும்பப் பார்த்தான் அவனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. முதற் பரிசான இலக்கம் 120706 என்றிருந்தது. தன்னிடமுள்ள லொத்தர் சீட்டு இலக்கமும் அதுதான் என்று உணர்ந்த சோமுவுக்கு ஆனந்தம் மேலோங்கியது.

இதோ நான் பரிசு வாங்கப் போகின்றேன். இன்றே கொழும்பு செல்ல வேண்டும் என்று கூறியபடி துள்ளி எழும்பினான். எனக்குத்தான் முதற் பரிசு என்று அவன் அவன் வாய் முணுத்தது. சுற்றும் முற்றும் பார்த்தான்.

பக்கத்தில் எவரும் இல்லை. வீதியால் வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. கோவில் மணி அடித்தது. அப்போது தான் அவன் தன் நிலைமையை உணர்ந்தான். இதுவரை நேரமும் தான் கண்டது "கனவு" என்பதை உணர்ந்தான்.

"ஏழைக்கு ஏது இன்பம்" என்று அவன்வாய் மீண்டும் முணுமுணுத்தது.

## உடற்பயிற்சியின் அவசியம்

"உடலை உறுதிசெய்" என்பது உயர்ந்தோர் கூறிய பொன்மொழி "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்" எங்கள் உயிர் குடியிருக்கும் வீடுதான் உடல். எனவே, உடலாகிய உறுப்புக்களைச் செம்மையாகவும் உறுதியாகவும் வைத்திருத்தல் அவசியமானதாகும். அதற்கு நாள் தோறும் உடற்பயிற்சிசெய்தல் அவசியம்.

பயன் படுத்தாதபொருள் இரும்பாய் இருந்தால் அதுகறல் கட்டிப் பழுதுபட்டுக் காண்கின்றோம் உடலுக்கு வேண்டிய பயிற்சி அளிக்கப்படாவிட்டால் அதுவும் பழுதுபட்டு பொலிவிழந்துவிடும். நோய்களை எதிர்க்கும் சக்தியை இழந்தால் நாம் பிணிகளால் வருந்தி உயிரைவிட நேரும்.

இவ்வுண்மையை உணர்ந்துதான்பாடசாலைகளில் உடற்பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன. ஆனால் மாணாக்கர் பலர் உடற்பயிற்சி செய்யாமல் ஒழிப்பதுவும் தட்டிக்கழிப்பதுவும் அது நடக்கும் வேளைகளைத் தெரிந்து கொண்டு நேரம் பிந்தி, பாடசாலைக்கு வருவதுவும் வழக்கமாக இருந்து வருகின்றது. இந்த நடவடிக்கையை தவிர்க்கப்படல் வேண்டும.

உடற் பயிற்சி மாணவர்களுக்கு மட்டுமல்லபோர் வீரர் காவற்துறையினருக்கும், இளைஞர், முதியவர், சிறுவர்கள் யாவருக்கும உடற் பயிற்சி செய்தல் அவசியம், பெரியவர்கள்உட ற்பயிற்சி செய்தல் அவசியம். பெரியவர்கள் உடற்பயிற்சி என்று செய்யாவிட்டாலும் நாள் தோறும் காற்றோட்டம் உள்ள வெளிகளில் நடப்பது நல்லது. இதனால் உடலுறுதியும் ஆரோக்கியமும் அவர்களுக்கு உண்டாகின்றது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனவே, நாம் உடற் பயிற்சியின் நற்பயன்களை உணர்ந்து ஒழுகுவோமாக. நாம் அனைவரும் உடற்பயிற்சி செய்து ஆரோக்கியமாக வாழ்வோமாக.

# வானொலி மூலம் நாடகக் கலையும் இசைக் கலையும் பெற்ற நன்மைகள்

வானொலி மூலம் நாம் அடையும் நன்மைகள் பற்பல. இப்படி யானக்கருவியைக் கண்டறிந்த விஞ்ஞானி "மார்க்கோனி" என்பவராவர் இதைக் கண்டு பிடித்து அவர் ஒரு மகத்தான சேவை புரிந்துள்ளார்கள்.

வானொலி இசைக்கலையும் நாடகக்கலையும் பல நன்மைகளைப் பெற்றுள்ளன. மன நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இந்த வானொலியிலைக் கேட்டும் இசை நிகழ்ச்சிகள் ஒரு மன ஆறுதல் கொடுக்கின்றது. அதனோடு அகு எயமைப் போன்ற மாணவர்களுக்கு இசைக் கலையையும் கற்பிப்பதற்கு ஏதுவாகக் காணப்படுகின்றது. சில மாணவர்களும், பெரியோர்களுக்கும் இது ஒரு பொழுது போக்கும் பொது அபிப்பிராய, தொடர்புச்சாதனமாக விளங்குகின்றது.

சோகத்தில் உள்ள மக்களை இன்பபுரிக்கு இழுத்துச் செல்லும் சாதனமாக வானொலி விளங்குகின்றது. வானொலி மூலம் கேட்கும் இனிய இசைகள், நாடகங்கள், கதை, கட்டுரைகள, பேச்சுக்கள் எல்லாம் மக்களுக்கு அறிவைப் புகட்டுவதோடு, அவர்களை ஆனந்த வெள்ளத்தின் நிலைக்குக் கொண்டு செல்கின்றன.

விவசாய நடவடிக்கைகளை- சிறு நாடக மூலம் மனிதனுக்குத் தெரியப்படுத்துகின்றோம். எமது நாட்டின் வரலாறுபற்றி சிறு நாடகங்களால் அறியக்கூடியதாக உள்ளது. எமது நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் கலை, கலாச்சாரம், சமூகப் பின்னணிகள், என்பன எமக்கு நாடகம் மூலம் அளிக்கப்படுகின்றது.

வானொலியைக் கேட்பதாலும் அந்த வானொலியில் வரும் நாடகக் கதைகளைக் கேட்பதாலும், எமக்கும் நாடகம் எழுத வேண்டுமென்ற எண்ணப் பாங்கும், நடிக்க வேண்டுமென்ற உணர்வும் ஏற்படுகின்றது. இதனாலேயே ஓலைக்குடிசையில் வாழ்கின்ற மக்கள் தொடங்கி ஒப்பரிய மாளிகையில் வசிக்கின்ற மக்களெல்லாம் வானொலியை வைத்திருக்கின்றனர்

வானொலி இல்லாதவர்கள், அயல் வீடுகளுக்குச் சென்று வானொலி கேட்டு அறிவையும், பொழுதுபோக்கையும் செய்கின்றனர்.

வானொலி கேட்டதால், இசைக்கலையில் வல்லுநர் ஆகியவர்களையும். நாடகக் கலைஞர்களாக வந்தவர்களையும் நாம் கண்டிருக்கின்றோம்.

இதனாலேயே, ஒவ்வொரு அரசாங்கமும், மேற்கு நாடுகள் என்றாலும் சரி கிழக்கு நாடுகள் என்றாலும்சரி மக்கள் வானொலியில் நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு ஒலிபரப்பும் நிலையங்களை அமைத்துள்ளது.

வானொலியால் ஏற்படும் பயன், அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபியைப் போல் காணப்படுகின்றது.

# மகாவலிகங்கையின் சுயசரிதை

என்னை யார் என்று கேட்கின்றீர்கள். ஈழத்திருமணி நாட்டுக்கு எழில் கொடுக்கும் தனி அரசி நான். எல்லோரும் என்னை மகாவலிகங்கை என்று அழைக்கின்றார்கள். மழை முகில் தவழும் சிவனொளிபாத மலைப் பிரதேசத்தில் 8000 அடி உயரத்தில் கோட்டச் சமவெளி இருப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அங்கு கொத்தமலி ஓயா என்னும் பெயருடன் தோன்றினேன். வரும் வழியில் மேலும் இளை அருவிகளை அணைத்துக் கொண்டேன். கண்டி மேட்டு நிலத்துட் புகுந்தேன். கண்டி மலையகத்தின் மாண்புமணி நகரம் அல்லவா? வேகத்தைக் குறைத்துக் கொண்டேன்.

பேராதனை வழியாகக் கண்டி நகரம் வலம் வந்தேன். தும்பளைப் பள்ளத்தாக்குட் புகுந்தேன். இங்கு உமா ஓயா, பதுளை ஓயா முதலிய கிளை நதிகளையும் என்னுடன் இணைத்துக் கொண்டேன். எனது புண்ணியக் குறைவோ என்னவோ தெரியவில்லை. மழை முகில் படியும் மாமலைக் குளங்கள் மலிந்த நாட்டை விட்டு வரண்ட பிரதேசத்தை அடைந்தேன். குளங்களை நீர் கொண்டு நிரப்பினேன். கிராமங்களைக் கீர்த்தி பெறச் செய்தேன். அங்கிருந்து மினிப்பேயை அடைகின்றேன். அங்கு என்னருமைச் சகோதரி அம்பை (அம்பன் கங்கை) வந்து என்னுடன் சங்கமித்துக் கொண்டாள். மலையகத்தில் பிறந்த மாது நான். மலைச்சாரல்களிலும் செங்குத்துப் பள்ளத்தாக்குகளிலும் சிந்தி மகிழ்வுடன் திரிந்து உலர் பிரதேசத்தில் 207 மைல்கள் வரை ஓடினேன். இண்ணிகா ஆறு என்றும் வெருகல் ஆறு என்றும் இரு கூறாகிக் கொட்டியாரக் குடாவிலும், அதற்குத் தெற்கேயும் கடலரசன் கையைப் பிடித்துக் கடிமணம் புகுந்து கொண்டேன். ஆண்டு தோறும் 72 இலட்சம் ஏக்கர் அடி நீரைச் சுமந்து செல்கின்றேன்.

தீவின் முழுப் பரப்பிலும் 18 வீதப் பிரதேசத்தை முன்பெல்லாம் வளமாக்கி வந்தேன். பெருகும் சனத் தொகையைப் பேணுவதற்கும், பண்ணைப் பிரதேசங் களுக்குத் தண்ணீர் தருவதற்கும், கைத்தொழில் தேவை களுக்கு மின்வலு வழங்குவதற்கும், என்னைப் பயன் படுத்தத் தொடங்கி விட்டார்கள். என்னை வடக்கே திசை திருப்பத் தொடங்கி விட்டார்கள். "துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்'' செயலாகி வருகின்றது.

பொல்கொல்ல, கொத்மலை, விக்ரோறியா, றத் தெணிகல, கொறகஹகந்தை முதலிய இடங்களில் எனது நீரின் உதவி கொண்டு, நீர் மின்வலு உற்பத்தி முயற்சி கள் தொடர்வதை நீங்கள் அறிவீர்கள். நான் இலங்கை யின் மாபெரும் நதி என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

நான் ஓயாமல் ஓடிக்கொண்டு இருக்கின்றேன். இளைப்பாறுவதற்கு எனக்கு நேரமே இல்லை. மனிதர் கள், விலங்குகள், தாவரங்கள், எல்லாம் இறப்பின்பின் நிம்மதி அடைவார்கள். இளைப்பாறுவார்கள். எனக்கு இளைப்பாற நேரமில்லை. இறப்பும் இல்லை. என்றும் ஓடிக் கொண்டு இருக்கின்றேன்.

வருகின்றேன்.

# சோமசுந்தரப் புலவர்

இயற்கை அழகின் கருவூலம் ஈழநன் நாடு. ஈழநன் நாட்டின் மணிமுடியாம் யாழ்ப்பாணம். மணிமுடியிற் பதித்த மாணிக்கம் மானியம்பதி. மானியம்பதிக்கு மான் பளித்தவர் வன்னிய சேகர முதலி. அவர்தம் வான் இளையில் வந்தவர் கதிர்காமர். கதிர்காமருக்கும் இலக்குமி அன்னையும் இயற்றிய அருந்தவப் பேறு எங்கள் சோமசுந்தரப்புலவர்.

சோமசுந்தரப்புலவர் 1880-ம் ஆண்டு ஜூன் திங்கள் தண்டமிழ்த்தாய் உள்ளங் களிப்பத் தரணியிலே தோன்றினார். தண்டமிழும், ஆங்கிலமும் தகவுடன் கற்றார். அகவை 15ஆக இருக்கும்போதே அழகொழிக்கும் தமிழ்ப் பாக்களை இயற்றத் தொடங்கினார். நவாலி அட்டகிரித் திருப்பதியில் தமிழ் முருகன் கோவில் கொண்டு அருளாட்சி புரிகின்றான். மட்டுருல் சோலை செறிந்த வட்டுச் புலவரை வளமாக்கி வாழ்வளித்தது. அங்கேயுள்ள இந்துக் கல்லூரியிலே ஆசிரியப் பணி பூண்ட புலவர் 40 ஆண்டுகள் நற்பணி புரிந்தார். தமிழ்மொழியையும் சைவ நெறியையும் தாழ்வின்றி பாதுகாத்தார்.

கல்வியும் ஒழுக்கமும் வாய்ந்த சோமசுந்தரப்புலவனார் அவர்தம் மாணவ மணிகள் ''பிறைசேர் அழகனார்'' என இவரைப் போற்றிப் புகழ்ந்தனர். புலவர் அவர்கள் தமிழ் பேரறிஞர்களான அருணாசலக் கவிராயர், கந்தசாமிக் கவிராயர், மறைமலை அடிகள், பண்டித்துரைத் தேவர், அரசர் சண்முகனார் ஆகிய தமிழ்ப் பெரியார்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றார், உயிரிளங் குமாரன் நாடகக் கதையை எழுதி நடிப்பித்துப் பெரும் பாராட்டினைப் பெற்றார். பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடிய புலவர் அவர்கள் ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி முதலிய சிறுவர்களுக்கான பாடலையும் புனைந்தார். பரிசும் பாராட்டும் பெற்றார்.

"தங்கத்தாத்தா" என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றார். ஈழந்தந்த இன்றைய தமிழ்ப்புலவர் வரிசையில் உயர்ந்த இடத்தைப் பெற்ற சோமசுந்தரப் புலவர் இயற்கைவளம். தாலவிலாசம், தந்தையார் பதித்துப் பத்து, சிறுவர் செந்தமிழ், கதிரவச் சிலேடை வெண்பா, நல்லையந்தாதி முதலிய நூல்களைத் தமிழ் அன்னைக்கு அன்புக் காணிக்கையாக அர்ப்பனம் செய்தார். 1953-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 10-ம் நாள் சிவபதம் எய்தினார்.

வாழ்க தமிழ்.

வளர்க சோமசுந்தரப்புலவர் புகழ்.

# தேர்த் திருவிழா

இன்று வீரபத்திரர் கோவிலில் தேர்த் திருவிழா காலை 5-30 மணியளவில் பூசை ஆரம்பிக்கப்பட்டது. நாங்கள் எல்லோரும் நீராடி உலர்ந்த ஆடை அணிந்து கொண்டு காலை 7-30 மணிக்குச் சென்றோம். போகும் போது பஞ்சாராத்தி தீபம் காட்டப்பட்டுக்கொண்டிருந்தது. இரு கைகளையும் தலைமேல் குவித்து கடவுளை வணங்கினோம், அங்கு சனத்திரள். எள்ளுப் போட்டால் எள்ளு விழாதபடி காணப்பட்டனர். மக்கள் எல்லாம் அழகான ஆடை அணிந்து ஒழுங்கையாலும், பெருந் தெருக்களாலும், கோவில் நாற்புற வீதியாலும் வந்து கொண்டிருந்தனர். அங்கு கட்டப்பட்டிருந்த பல வர்ணக் கடைகளைப் பார்க்கும்போது கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் கடைகளைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தோம். அங்கே ஒரு தாய் தன் மகளின் மோதிரம் தொலைந்துவிட்டதென்று அழுதுகொண்டு நின்றாள், அந்தத் தாயைப்

பார்க்க மிகவும் கவலையாக இருந்தது. புதிதாகச் செய்யப்பட்ட தேர் மிக்க அழகுடன் காட்சி அளித்தது. சுவாமியைத் தேரில் ஏற்றும்போது ஐக்களெல்லாம் "அரோகரா, அரோகரா" என்று நாற்றிசையும் ஒலிக்க, விண்ணை இடித்துக்கொண்டு போவது போல் அவர்களின் ஒலி ஒலித்தது.

தேரை ஆண்கள் மிகச் சிரமப்பட்டு இழுத்தனர். சில ஆண்கள் தேருக்குப் பின்னால் பிரதட்டை செய்தனர் பெண்கள் கும்பிட்டு வலம் வந்தார்கள். நாங்களும் தேருக்குப் பின்னால் வெளி வீதி சுற்றி வந்தோம். தேரை இழுத்தவர்கள், திரும்பவும் தேரை இருப்பிடத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

நாங்கள் பாக்கு, பழம், வெற்றிலை, தேங்காய், சற்பூரம் என்பவற்றைத் தாம்பாலத்தில் வைத்து பூசகரிடம் கொடுத்தோம். அவர் அவற்றை அர்ச்சனை செய்து தந்தார். தேரில் முன் பக்கத்தில் நேர்த்திக்காக காவடி ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கடைகளுக்குச் சென்று இனிய உணவுகளையும், பழவகைகளையும் உண்டு மகிழ்ந்தோம். பின் விளையாட்டுப் பொருட்களை வாங்கி மகிழ்ச்சியாக வீடு திரும்பினோம்.

அந்தத் தேர்த் திருவிழாக் காட்சி என் மனத்தில் பசுமரத்தில் ஏறிய ஆணிபோல் ஏறியது.

நான் விரும்பும் பெரியார், உலகப் புகழ்பெற்ற

## கலாயோகி - ஆனந்தக்குமாரசாமி

எமது நாடு நானூற்றைம்பது ஆண்டுகள் அந்நியர் ஆட்சியில் இருந்தது. தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடு தலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நின்று இந்த இருள் மயமான வேளையில் நாமெல்லாம் "பாமரராய் விலங்கு களாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல்லபான்மை கேட் டோம்" ஊமையராய், குருடர்களாய், செவிடர்களாய் வாழ்ந்திருந்தோம். நம் பெருமை நாம் அறியா நலிவு பெற்றோம். மேனாட்டாருக்கு அஞ்சி எம் இனம் வாழ்ந்தது.

ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தேழாம் ஆண்டு கொழும்பிலே முத்துக்குமாரசுவாமி முதலியாருக்கும் எலிசபெத் கிளே பீபீ என்னும் ஆங்கில நாட்டு நங்கைக் கும் அவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் அனைவரும் பொது மகனாக ஆனந்தன் பிறப்பெய்தினார். அறியாமை இருள் அகற்ற அனைத்துக் கொண்டான். இவர் பிறந்து இரண்டு ஆண்டுகள் ஆகுமுன் எதிர்பாராத விதமாக இவரது தந்தையார் இறந்தார். முழந்தை ஆனந்தர் இங்கிலாந் திலே தாயாரின் மேற்பார்வையிலே வளர்ந்தார். அங்கு பயின்று அங்கு விக்ளிக் கல்லூரியிலும், இலண்டன் பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்று புவிச்சரிதவியலிலும் தாவரவியலிலும் விஞ்ஞானமாணிப்பட்டம் பெற்றார், முதலாம் வகுப்பிலே சிறப்புடன் தேறிய இவர் இருபத் தாறாம் வயதில் இலங்கைக்கு வந்தார். இங்கு இவர் கனிப்பொருள் ஆய்வுப் பகுதியிலே தலைவராய் நியமனம் பெறறார். இத்துறையில் சிறநத ஆராய்ச்சிகளை இவர் செய்தார். இவ்வாராய்ச்சிகளின் பயனாக இவர் உயர்ந்த தன்னீர்ப்புக்கொண்ட ஒரு கனிப்பொருளைக் கண்டு அறிந்தார். அதன் பெயர் தேற்கனைற்று.

இவர் ஈழத்திலே பல சிற்ப ஓவியங்களைக் கண்டார். ஈழத்தின் பண்பாடும், கலைச்சிறப்பும் இவர் உள்ளத்தில் ஒரு எழுச்சியையும், விழிப்பையும் உண்டுபண்ணின. பக்க நாடான பாரத தேசத்தில் மூண்டெழுந்த தேசாபிமான் செஞ்சுடரின் ஓவியம் அவரின் உணர்ச்சி விளக்கத்தை மிகுவித்தது. பல பொதுப் பணிகளில் ஈடுபட்டார் மேதை குமாரசுவாமி.

நாட்டின் மறுமலர்ச்சிக்காக ஆயிரத்துத்தொள்ளாயிரத்து ஐந்தாம் ஆண்டிலே இலங்கைச் சீர்திருத்தக் கழகம் என்னும் கழகத்தை நிறுவினார். கழகத்துக்காக் இலங்கைத் தேகிய சஞ்சிகையை வெளியிட்டார். இதன் ஆசிரியராக இருந்து தம் கருத்துக்களை எழுதினார். தேசிய மொழிகளிற் கல்வி கற்பித்தல் வேண்டும் எனவும், நாட்டின் கலைகளுக்கு ஆக்கம் அளித்தல் வேண்டும் எனவும் அந்நியப் பண்பாடுகளைப் பின்பற்றுதல் நாட்டுப் பற்றுக்கும் பொருளியல் வளர்ச்சிக்கும் இடையூறாகும் எனவும் விளக்கினார்.

இந்த நாட்டில் பல்கலைக்கழகக் கல்வி தோன்றி வளர்வதற்கு வழிவகுத்த பகுதிகளிலே பிரதானமான ஒருவரும் ஆனந்தக்குமாரசுவாமியே ஆவர். ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறாம் ஆண்டில் இலண்டன் பல்கலைக் கழகம் ஆனந்தருக்கு புவிச்சரிதவியலிலே கலாநிதிப் பட்டத்தை நல்கியது. அடுத்த பத்து ஆண்டுகளையும் இவர் பெரும்பாலும் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் கழித்தார். இந்தியாவில் இவர் தேசிய விடுதலை இயக்கத்திலும் பங்குகொண்டு உழைத்தார். ஆயிரத்துத்தொளாயிரத்துப் பத்தாம் ஆண்டில் வட இந்தயாவில் விரிவான யாத்திரை ஒன்றை மேற்கொண்டார். அந்த யாத்திரையில் பெருந்தொகையான சித்திரங்களையும், வண்ண ஓவியங்களையும் அவர் சேகரித்துக் கொண்டார். அந்த ஆண்டிலும். அதற்கு அடுத்த ஆண்டிலும், அலகபாத்தில் நடந்த ஐக்கிய மாகாணக் கண்காட்சியின் கலைப் |பகுதிப்

பொறுப்பாளராகக் கடமையாற்றினார். இந்தியாவில் இருந்தபோது கவியரசர் தாகூர், அன்னிபெசன்ற் சகோதரி, நிவேதிகா முதலானோரின் தொடர்பு கிடைத்தது. இத்தொடர்பினாற் பண்பாடு, தேசியம் ஆகியவற்றில் அபரிமிதமாகவே அவருக்கிருந்த ஈடுபாடு மிகுதியாயிற்று. பெருந்தொகையான கட்டுரைகளையும், நூல்களையும் அவர் வெளியிட்டார்.

இவர் வெளியிட்ட நூல்கள் பல. அவற்றுட் இடைக் காலச் சிங்களக்கலை, தேசிய இலட்சியவாதக் கட்டுரைகள், புத்தரும் பௌத்த திருமுறையுப், இந்தியக் கலை வடிவங்கள், சிவ நடனம், காலமும் கலையின் உட்பொருளும், கலையின் இயற்கையின் பிரிபு என்பன முக்கியமானவை.

கலாயோகி ஆனந்தக்குமாரசாமி அவர்களின் வாழ் நாளில் இறுதி இருபது ஆண்டுகளும் ஆக்கவூக்கம் மிக்க ஆண்டுகளாக மிளிர்ந்தன. இக்காலத்தில் இவர் முன்னூற்றுநாற்பத்தொரு புத்தகங்களையும், கட்டுரைகளையும், நாற்பது புத்தக மதிப்புரைகளையும் வெளியிட்டார். என்று அறிகின்றோம். அன்றியும் விரிவுரைகள் பலவற்றை ஆற்றினார். பெருந்தொகையான கடிதங்களை எழுதினார்.

ஆயிரத்துத்தொளாயிரத்து நாற்பத்தெட்டில் இந்தியாவின் வடக்கேயுள்ள இராசதலத்திலமைந்த ஆச்சிரமத்திற்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார்கள்.

அதற்கிடையில் 1947–ம் ஆண்டு புரட்டாதி மாதம் அவர் இப்பூவுலக வாழ்க்கையை விட்டு நீங்கினார்.

இப்படியான இவரை எம்மால் மறக்கமுடியாது. என்றாலும் எனக்கு ஒரு கவலை, நான் வாழும் காலத்தில் அவர் வாழவில்லை என்பத்த என் பெரும் கவலையாகும்.